# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம் 20-08-2025 புதன் கிழமை மாலை 3.00** மணிக்கு நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அக்கூட்டம் 21-08-2025 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) வார்டு 17 பந்நியணி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1409 தீர்மானிக்கப்பட்டது.

## 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானம்

1) பாப்பிளாஞ்சியில் சுமார் 25 வீடுகள் இருக்கிறது. அந்த பகுதி மேடான பகுதியானதால் எப்போதும் குடிநீர் கிடைப்பதில்லை. எனவே அந்த இடத்தில் அரசுக்கு சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் ஆழ்துளை கிணறு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1410 தீர்மானிக்கப்பட்டது.

## 10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஞா. ஜெயின் சாந்தி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) விளவங்கோடு அரசுப்பள்ளி அருகே பெரியவிளையில் ராபர்ட் அவர்களின் வீட்டு முன்பு உள்ள பாதையின் நடுவில் நிற்கும் மின்கம்பத்தை பாதையின் ஓரமாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1411 தீர்மானிக்கப்பட்டது.

2) வார்டு எண்.10-ல் பழவார் சாலையில் குழிவிளை பாதையில் தங்கேஸ்வரன் என்பவரின் வீட்டின் அருகில் பாதையில் நடுவில் நிற்கும் மின்கம்பத்தை பாதையின் ஒரமாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1412 தீர்மானிக்கப்பட்டது.

3) விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி நுழைவு வாயிலில் பள்ளி பெயருடன் அலங்கார வளைவு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1413 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 1</u>

குழித்துறை நகராட்சியின் பொதுசுகாதார வாகனம் TN.75J.8227-க்கு F.C. பணிகள் மேற்கொள்ளவும் செலவினத்தொகை ரூ.2,95,000/-க்கும் நகர்மன்ற தீர்மான எண்.1135, நாள் 28-01-2025-ன்படி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்சமயம் பணிகள் முடிவுற்ற நிலையில் செலவினத்தொகை ரூ.3,41,576/- வழங்கிட "ABT Industries" யிடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே அனுமதி பெறப்பட்ட தொகையினை விட கூடுதல் தொகை ரூ.46,756/- மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2778/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.1414 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மாற்றுதிறனாளிக்கான மன்ற உறுப்பினர் நியமனம் செய்திட 01-07-2025 முதல் 17-07-2025 வரைக்குள் நியமன விண்ணப்படிவம் இணையதளம் மூலமாக எடுக்க தினசரி நாளிதழ் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பில் தொகை பட்டியல் வரப்பெற்றது. பட்டியல் கீழ்கண்டவாறு.

| வ. எண். | நாளிதழ் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினகரன் | 9,374 |

எனவே மேற்படி நாளிதழுக்கு பட்டியல் தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2138/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1415 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரையிலான வார்டுகளில் புதிதாக 200 எண்ணம் LED விளக்குகள் பொருத்தப்பட உள்ளதால் 61 விண்ணப்பங்கள் Online-ல் பதிவேற்றம் செய்திட விண்ணப்பக் கட்டணம் தலா ரூ.200/- வீதம் ரூ.12,200/- மற்றும் 6 மின்கம்பங்கள் மாற்றியமைத்திட Online பதிவேற்றம் மற்றும் பத்திரம் உட்பட ஒரு விண்ணப்பத்திற்கு தலா ரூ.500/- வீதம் ரூ.3000/-ம் சேர்த்து ரூ.15,200/- செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.336/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1416 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம், மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் உருவாகும் கழிவுகள் அங்காங்கே போட்டு வைப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே மக்கும் கழிவுகள் மக்காத கழிவுகள் தனி தனியே பிரித்து போடுவதற்கான Stainless Steel Heavy Metal (twin bin) 25 எண்ணம் வாங்குவதற்கு ஒரு twin bin உத்தேச செலவினம் ரூ.13500/- வீதம் 25 x 13500 = 3,37,500/-யினை பொதுநிதியிலிருந்து செலவினம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2522/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1417 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சியில் 21 வார்டுகளிலும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள 9 மின்கம்பங்களை மாற்றியமைக்க குழித்துறை மற்றும் மார்த்தாண்டம் மின்வாரியங்களிலிருந்து தலா ரூ.74,957/- மற்றும் ரூ.1,19,037/-க்கான கேட்பு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1851/2025/**இ**1.

மன்றத்தீர்மான எண்.1418 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சியில் 2025-ம் ஆண்டு 100-வது வாவுபலி பொருட்காட்சியில் 09-07-2025 முதல் 28-07-2025 முடியும் வரை கூடுதல் பணியாக பணிபுரிந்த நகராட்சி நிரந்தர பணியாளர்கள் மற்றும் டெங்கு, SBM, Mazdoor Grade-2, பணியாளர்களுக்கும், Privatation, Outsourcing பணியாளர்களுக்கும் கீழ்கண்டுள்ள விபரப்படி ஊக்கத்தொகை ( Bata ) வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | 100-வது வாவுபலி ஊக்கத்தொகை |
|---|---|---|
| 1 | நகராட்சி பொது (ம) குடிநீர் பணியாளர்கள் | 604 |
| 2 | நகராட்சி சுகாதார பணியாளர்கள் | 498 |
| 3 | டெங்கு பணியாளர்கள் SBM | 200 |
| 4 | Privatation, Mazdoor Grade-2, Outsourcing | 150 |

<u>அ.கு.:-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**650/2025/**அ**2.

மன்றத்தீர்மான எண்.1419 ஒத்திவைக்கப்பட்டது

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுமணி பகுதியில் மேம்பாலத்தின் கீழ்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் எரியாமல் அனைத்தும் பழுதாகி பயன்பாடில்லாமல் உள்ளது. அதிக மக்கள் புழங்கும் பகுதியில் மின்விளக்குகள் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்

அறிவுரையின்படி நகராட்சி மூலம் அனைத்து மின்விளக்குகளையும் சரி செய்து புதிய மின்விளக்குகள் அமைப்பதற்கும் பொது மக்களின் நலன் கருதியும் இப்பணி செய்திட ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததின்படியும் 150W LED Street Light Fittings 13 எண்ணமும், 60W LED Street Light Fittings 30 எண்ணமும் மற்றும் அதற்கான cable-களும் புதியதாக அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4,60,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2574/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1420 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் திருத்துவிளாகம் சாலை குண்டும் குழியுமாக பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே போக்குவரத்து நலன் கருதி சிமெண்ட சாலை அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைப்படி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3,50,000/- (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2562/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1421 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் உரக்கிடங்கு செல்லும் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் ஓடையை இணைப்பதற்கு புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைப்படி மதிப்பீடு ரூ.2,90,000/- (இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2569/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1422 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் குழித்துறை பழைய பாலம் அருகில் இரவு நேரங்களில் மிகவும் இருள் சூழ்ந்து உள்ளதாகவும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்விளக்கு அதிக விட்டம் இல்லாமல் உள்ளதாலும் வெளிச்சம் இல்லாமல் அதிக அசம்பாவிதங்கள் நடந்து வருவதாக நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளதின்படி, பழைய பாலம் மக்கள் புழங்கும் பகுதியாகும் எனவே பொதுமக்கள் நலன்கருதியும் போக்குவரத்து நலன் கருதியும் நகர்மன்ற உறுப்பினர் வேண்டுகோளின் படியும், நகர்மன்றத்தலைவர் மற்றும் ஆணையாளர் பொறியாளர் அறிவுரைப்படியும் 15 எண்ணம் Pole-களில் 120W LED Street Light Fittings புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/- (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**2570/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1423 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் கொல்லகுளம் முதல் வடக்கு தெரு Sub Road (Unicode 149014LO58.) செல்லும் சாலை குண்டும் குழியுமாக மழைகாலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கோடு ஏற்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்படி சாலையில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைப்படி இடம் பார்வையிட்டு உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/- (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2563/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1424 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுமணி பகுதியில் மேம்பாலத்தின் மேல்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் எரியாமல் பழுதாகி பயன்பாடியில்லாமல் உள்ளது. மக்கள் அதிகம் புழங்கும் பகுதியில் மின்விளக்குகள் எரியாததால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நகராட்சி மூலம் அனைத்து மின்விளக்குகளையும் சரி செய்து புதிய மின்விளக்குகள் அமைத்திட ரூ.4.70 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2571/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1425 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் குலசேகரம் செல்லும் மெயின் ரோட்டிலிருந்து சிறியகாட்டுவிளைக்கு செல்லும் குறுக்கு சாலை மேடாக செல்கிறது. இரண்டு பக்கமும், பள்ளமாக பாதுகாப்பில்லாமல் உள்ளது. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி சாலையில் Handrail அமைப்பதற்கு நகர்மன்ற உறுப்பினரின் மனுவின்படியும் நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரைப்படி மதிப்பீடு தொகை ரூ.1,80,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2566/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1426 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் மேம்பாலத்திற்கு கீழ்பக்கத்தில் இரவு நேரங்களில் மிகவும் இருள் சூழ்ந்து உள்ளதாகவும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் பழுதாகி அதிக வெளிச்சம் இல்லாமல் அதிக அசம்பாவிதங்கள் நடந்து வருவதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி நகராட்சி மூலம் பழுதான அனைத்து மின் விளக்குகளையும் மாற்றி புதிய மின்விளக்குகள் அமைப்பதற்கு

ஆணையாளரிடம் தெரிவித்ததன் படியும் 150 W LED Street Light Fittings 16 எண்ணமும் 60 W LED Street Light Fitting 25 எண்ணமும் மற்றும் அதற்கான cable-களும் புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,40,000/- (நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்

**ந.க.எண்**.2573/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1427 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 15</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் வெட்டுமணி பாலத்தின் தென்பக்கம் ஹீரோ ஹோண்டா கம்பெனி பக்கத்திலிருந்து தாமிரபரணி ஆற்றிற்கு செல்லும் படியன்விளை சாலை குண்டும் குழியுமாக மழைகாலங்களில் சேறும் சகதியுமாக பொதுமக்கள் நடந்து செல்லுவதற்கு இயலாமல் மிகவும் மோசமாக உள்ளது. மேற்படி சாலையானது பல வருடங்களாக சீர் செய்யாமல் உள்ள காரணத்தினால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி சாலையில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரையின்படி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9,60,000/- (ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்

**ந.க.எண்**.2568/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1428 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உண்டனகுழி கிணறு குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிணறு தூர்வாரி சுத்தம் செய்யாத காரணத்தால் தண்ணீர் கலங்கி சுவை மாறி உள்ளது. எனவே மேற்படி கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்வதற்கும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கும் அப்பகுதி பொதுமக்கள் கேட்டு கொண்டதன் படியும் நகர்மன்ற உறுப்பினரின் வேண்டுகோளின் படியும், நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைபடியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,30,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்

**ந.க.எண்**.2567/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1429 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியின் மேம்பாலத்தின் மேல்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் எரியாமல் அனைத்தும் பழுதாகி பயன்பாடில்லாமல் உள்ளது. அதிக மக்கள் புழங்கும் பகுதியில் மின்விளக்குகள் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நகராட்சி மூலம் அனைத்து மின்விளக்குகளையும் சரி செய்து புதிய மின்விளக்குகள் அமைப்பதற்கு ஆணையாளரிடம் தெரிவித்ததின்படி 60W LED Street Light Fittings மற்றும் cable புதியதாக அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4,70,000/- (நான்கு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2572/2025/இ1.
மன்றத்தீர்மான எண்.1430 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 18</u>

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2018-2019 (TURIP)-ன்கீழ் குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.எஸ். ஜீன்ஸ் மேற்கொண்ட பணி மேற்கொண்டமைக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் தொகை ரூ.16913/- ஒப்பந்ததாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் மேற்படி தொகையினை திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.
மன்றத்தீர்மான எண்.1431 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.